**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.552/2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 07.11.2025.**

| | |
|---|---|
| **Name : பத்மாவதி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தங்கமாபுரிபட்டிணத்தில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். எனக்கும் எதிரி விஜயா என்பவருக்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. இது சம்மந்தமாக கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். கடந்த 16.10.2019 ம் தேதி காலை 10.50 மணிக்கு நான் என்னுடைய இடத்திற்கு சென்ற போது அங்கிருந்த விஜயா மற்றும் அவருடைய மகன் விமல்ராஜ் இருவரும் நின்று கொண்டிருந்தார்கள். அங்கு வந்த விஜயா என்னை பார்த்து தெவிடியா கண்டாரஓலி என்று கெட்ட வார்த்தையால் திட்டி என் மேலே புகார் கொடுக்கிறாயா என்று சொன்னார்.

2) அவர் மகன் விமல் ராஜிடம் அவ கையை உடைந்த்தால் தான் புகார் கொடுக்கமாட்டாள் என்று விஜயா சொன்னார். உடனே விமல்ராஜ் அங்கிருந்த கட்டையை எடுத்து என் வலது கை தோள் பட்டையில் அடித்தார். அதன் பிறகு கருமலைக்கூடல் காவல் நிலையத்திற்கு புகார் கொடுத்துவிட்டு பிறகு மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். நான் காவல் நிலையத்தில் எழுத்து பூர்வமான புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரை தான் நான் காவல் நிலையத்தில் கொடுத்தேன். அதிலுள்ள விவரம் தெரியும்.

புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கட்டையால் தான் எதிரி விமல்ராஜ் என்பவர் என்னை அடித்தார். கட்டை **சா.பொ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

3) முதல் விசாரணையில் சொன்னவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம்.புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான் கைப்பட எழுதினேன். வீட்டிலேயே எழுதினேனா என்றால் காவல் நிலையத்தில் எழுதினேன். நான் புகார் கொடுக்க சென்ற போது எதிரிகள் இருவரையும் காவல் நிலையத்தில் உட்கார வைத்திருந்தார்களா என்றால் நாங்கள் சென்ற பிறகு பிடித்து வந்தார்கள். நாங்கள் புகார் அளித்த பிறகு மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம்.

4) ஏற்கனவே கொடுத்த புகாரை எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் இந்த வழக்கு புகாருக்கு முன்பாக எப்போது கொடுத்தேன் என்றால் மறந்துவிட்டது. நிலப்பிரச்சனை என்பது என்னவென்றால் என் மாமாவிடம் எதிரிகள் நிலம் வாங்கியது சம்மந்தமாக எங்களுக்குள் பிரச்சனை உள்ளது. நிலப்பிரச்சனை சம்மந்தமாக புகார் கொடுத்தேன். அதுசம்மந்தமாக விசாரித்தார்களா என்றால் ஆமாம். புகார் சம்மந்தமாக விசாரித்த போது நீதிமன்றத்தில் பரிகாரம் கோருமாறு கேட்டுக் கொண்டார்கள்.

5) 1ம் எதிரி விஜயா என் மீது சிவில் வழக்கு தாக்கல் செய்து நடந்து வருகிறது. சம்பவத்தை தொடர்ந்து நான் எத்தனை நாட்கள் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் 8 நாட்கள் இருந்தேன். புகார் கொடுக்கும் போது யார் யார் சென்றோம் என்றால் நான் மட்டும் தான் காவல் நிலையம் சென்றேன். மருத்துவமனையில் என்னுடன் யார் வந்தது என்றால் என் அம்மா ஆட்டோ மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.

6) சம்பவயிடத்திற்கும், நாங்கள் குடியிருக்கும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் ஒரு தெருவை தாண்டி குடி உள்ளோம். நான் டெய்லர் தொழில் செய்து

வருகிறேன். என்னை அடிக்கும் போது எத்தனை மணியிருக்கும் என்றால் காலை 11 மணியிருக்கும். சண்டை நடக்கும் போது அக்கம் பக்கம் உள்ளவர்கள் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். யாராவது விலக்கிவிட்டார்களா என்றால் இல்லை. எத்தனை பேர் பார்த்திருப்பார்கள் என்றால் என்னால் சொல்ல முடியாது. யார் யார் இருந்தார்கள் என்பதை நான் பார்க்கவில்லை. ஆனால் நபர்கள் இருந்தார்கள். அவர்கள் சம்பவயிடத்தில் வசிப்பவர்களா என்றால் வேறு நபர்களும் இருந்தார்கள்.

7) குறிப்பிட்ட நபர்கள் சண்டையை பார்த்ததாக என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியாது. இடம் எப்படி எனக்கு சொந்தம் என்றால் என் தாத்தா நிலமாகும். எங்கள் நிலமும் எதிரி நிலமும் ஒரே பொழியில் உள்ளதால் என்றால் ஆமாம். விலைகொடுத்து என் மாமனாரிடம் எதிரிகள் வாங்கினாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த இடத்தில் வீடு கட்டி குடியுள்ளார்களா என்றால் ஆமாம்.

8) நிலத்தை அபகரித்தார்கள் இது வரை நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு வழக்கு நடத்தும் வசதி இல்லை. இது சம்மந்தமாக மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். என் புகாரில் மேற்சொன்ன விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த புகார் விசாரணைக்கு வந்ததா என்றால் இல்லை. புகார் யாரிடம் கொடுத்தேன் என்றால் அழகுதுரை, காவல் உதவி ஆய்வாளர் வசம் கொடுத்தேன்.

9) இந்த புகாரை விசாரிப்பதற்கு முன்னர் நிலம் சம்மந்தமான புகாரை அழகுதுரை தான் விசாரித்தாரா என்றால் இல்லை. எந்த தேதியில் எதிரிகளை கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டார்கள் என்றால் 16.10.2019 ம் தேதியாகும். எப்போது வெளியே வந்தார்கள் என்ற விவரம் தெரியாது. 23.10.2019 ம் தேதி மேச்சேரியில் பார்த்திபன் என்பவரை வைத்து நோட்டீஸ் அனுப்பினேனா என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு நான் அனுப்பியது என்றால் ஆமாம். அறிவிப்பு நகல் **எ.ம.சா.ஆ.1** ஆகும்.

10) இந்த வழக்கில் சாட்சிகளான தனசேகரன் என் நண்பர், கௌரி எதிர் வீட்டில் குடியிருப்பவர், மாது என்பவர் இறந்துவிட்டார், மல்லிகா அதே தெருவில் வசிப்பவர். காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது போலீசார் மருத்துவமனைக்கு செல்ல மெமோ கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது.

11) மருத்துவரிடம் எனக்கு தெரிந்த ஒரு ஆண் நபரும், ஒரு பெண் நபரும் அடித்ததாக சொன்னேனா என்றால் ஆமாம். விறகு கட்டையால் அடித்ததாக மருத்துவரிடம் சொல்லவில்லை என்றால் கட்டையால் அடித்ததாக சொன்னேன். நான் மேல்சிகிச்சைக்காக செல்லவில்லை என்றால் ஆமாம். நான் சொன்னவாறு சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவமே நடக்கவில்லை என்றும் நான் கொடுத்த நிலம் சம்மந்தமான புகார் விசாரணையின் போது காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் எதிரிகளை கடுமையாக தாக்கியதில் 2ம் எதிரிக்கு தாடை எலும்பு முறிவு ஏற்பட்டு அதிலிருந்து தப்பிக்க வேண்டி கருமலைக்கூடல் காவல் நிலையத்தார் சொல்லி கொடுத்து இந்த புகார் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டு காவல் துறையினர் கேட்டுக் கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12) இவ்வழக்கின் எதிரிகள் மனித உரிமை ஆணையத்தில் புகார் அளித்து விசாரணை தற்போது வரை நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் விசாரித்தாரா என்றால் விசாரிக்கவில்லை. போலீசாரை விசாரித்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

13) இந்த புகார் கொடுத்த பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தனர். எவ்வளவு நாட்கள் கழித்து விசாரித்தார்கள் என்றால் 15 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். எதிரிகள் என் மாமாவிடம் விலை கொடுத்து வாங்கி வீடு கட்டியுள்ளார்கள் என்றும் நான் தான் அவர்கள் நிலத்தை ஆக்கிரமித்து, அராஜகம் செய்து அவர்களை அடித்ததும் இல்லாமல் பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த நிலம் எனக்கு உரிமையானது என்று சொல்லி போலீசாரிடம் ஆவணம் கொடுத்தேனா என்றால் இல்லை. அவர்கள் வீடு கட்டி எத்தனை வருடம் ஆனது என்றால் 3 வருடமாகிறது. அந்த இடம் எவ்வாறு பதிவு செய்தார்கள் என்றால் நோட்டரி வழக்கறிஞர் மூலமாக புறம்போக்கு நிலம் என்பதால் பத்திரம் பதிவு செய்தார்கள். என் மாமா விற்றது செல்லாது, நிலத்தை அபகரித்தார்கள், நிலத்திலிருந்து காலி செய்யுமாறு வழக்கு போட்டுள்ளேனா என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**